# திருக்குறளில் ஒரு பழமும் இருமலர்களும்

# Thirukuralil Oru Pazhamum Irumalargalum

***முனைவர் ம. ஏ. கிருட்டின குமார்***
இணைப் பேராசிரியர், காஞ்சி மாமுனிவர் அரசு பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி

**Dr. M. E. Krishna Kumar**
*Associate Professor*
*Kanchi Mamunivar Government Institute of Higher Education and Research , Pondicherry*

**ஆய்வுச் சுருக்கம்**

*அகர முதல எழுத்தெல்லாம் என "அ" கரத்தில் தொடங்கி "கூடிமுயங்கப்பெறின்" என "ன்" கரத்தில் முடியும் திருக்குறளின் அருமை ஒவ்வொரு குறளிலும் புலப்படுகிறது. தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருக்குறளானது சுவைப்போரின் திறத்திற்கேற்ப விரிந்து கொண்டே செல்கிறது. எனவே, இது மழலையர் பள்ளி முதல் ஆய்வுப் படிப்பு வரை பயிலப்பட்டு வருவதனைக் காண முடிகிறது. தெய்வப் புலவர் அருளிய திருக்குறளில் இருமலர்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. இவ்விரு மலர்களையும் எவ்வாறு கையாண்டுள்ளார் என நோக்கும் வகையிலேயே இக் கட்டுரை அமைகிறது.*

***முக்கியச் சொற்கள்:***
*திருக்குறள், அறம், மலர்கள், அனிச்சமலர், குவளை மலர்*

**Abstract**

*The beauty of Thirukkural is evident in every verse, starting with the first letter of the alphabet and ending with the letter 'N' as 'Koodimuyangapperin'. Thiruvalluvar's Thirukkural, the deity, expands according to the opening of the taster. Therefore, it can be seen that it is being studied from kindergarten to research. There are only two flowers in the Thirukkural inspired by the deity. This article is based on how he handled these two flowers.*

***Keywords:***
*Thirukkural, Aram, Flowers Anichamalar, Kuvalai Malar*

**Citation**
Krishna Kumar, M.E. "Thirukuralil Oru Pazhamum Irumalargalum." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 4, 2022, pp. 63–68.

**அறத்தின் உச்சம்**

*கற்றதன் பயன்வாலறிவனைத் தொழுதல். வான்மழையின்றி புவிவளமில்லை. செயற்கரிய செய்வோர் பெரியோர்; செய்யார் சிறியோர். மனத்தில் மாசின்றி வாழ்தலே அறம். அன்பும் அறனும் உடையதே இல்வாழ்க்கை. மங்கலம் என்பது மனைமாட்சி. அமிழ்தினும் இனிதே மக்களைப் பெறுதல். அன்பு அறத்திற்கும் மறத்திற்கும் துணை. என முதன்மையான எட்டு அறங்களை முதல் எட்டு அதிகாரங்கள் புலப்படுத்தி விடுகின்றன. இவ்வறங்கள் அனைத்தையும் பின்பற்றுதல் உறுதியுடையார்க்கே உடைமையாகும். ஒன்பதாவது அதிகாரம் அனைவராலும் எளிதில் பின்பற்றக் கூடிய வழிமுறைகளை; அறநெறிகளை உணர்த்துவதாக அமைகிறது. அதுவே விருந்தோம்பல். இவ்விருந்தோம்பலே அறத்தின் உச்சமாக அமைவதனை*

***மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து***
***நோக்கக் குழையும் விருந்து (திருக்குறள்-90)***

*என்னும் திருக்குறள் புலப்படுத்துகிறது.*

**விருந்தோம்பலில் அனிச்சம்**

*ஒவ்வொரு அதிகாரமும் பத்துத் திருக்குறள்களை உடையது. அவ்வாறு அமையும் அதிகாரத்துள் பத்தாம் திருக்குறள் முத்தாய்ப்பாக இருப்பதனை உணர்வுடையோர் உணர்வர். எனினும் ஒரு குறளுக்கு மற்ற ஒன்பது திருக்குறள்களும் துணை செய்யும் வகையில் யாத்துள்ளது தெய்வப் புலவரின் புலமைச் சிறப்பு. அறத்தில் சிறந்தது இல்லறம். இல்லறத்தில் சிறந்தது விருந்தோம்பல். விருந்தோம்பலில் சிறப்புமுகம் திரியாமை. என ஒவ்வொரு படி நிலையில் அறத்தின் வலிமையினை உணர்த்துகிறார் தெய்வப் புலவர். முகந்தாலே வாடுவதும் மலர்களில் மெல்லியதுமான அனிச்சம் பூவினைக் காட்டிலும் விருந்தினர் மனம் மென்மையுடையது. எனவே, உண்ண வருவோரின் கால்களைத் தொட்டு வணங்கி அன்னமிடும் வழக்கம் இன்றும் பல கோவில்களில் ''மகேஸ்வர பூசை'' என்னும் பெயரில் பின்பற்றப்படுவதனைக் காண முடிகிறது. உண்போர் உள்ளத்துள் உறையும் இறைவனைக் காணுதல் என்பதே இவ்வழக்கு. இப்பண்பாட்டை இல்லறத்தில்; குறிப்பாக விருந்தோம்பலிலும் பின்பற்ற வேண்டும் என்பதனை உணர்ந்து கொள்ள முடிகிறது. இதன் வழி தமிழர்கள் இல்லறத்திலும் குறிப்பாக விருந்தோம்பலிலும் சிறந்திருந்ததனை உணர்த்துகிறார் திருவள்ளுவர்.*

**இதழ்கள் வாடும் அனிச்சம்**

*புதிதாக உண்ண வருவோருக்கான உணவிடும் வழக்கமே விருந்தோம்பல். எனவே, உண்ண வருவோர் அன்பின் காரணமாக குழைவர். அக்குழைவினை நீக்கும் வகையில் அவர்களை மதித்து உணவிடுதலே சிறப்பெனத் தெய்வப் புலவர் உணர்த்தியுள்ளார். விருப்புடன் நோக்குவதும் வெறுப்புடன் நோக்குவதும் மனிதர் இயல்பு. இதனை அனைவரும் எளிதில் உணர்ந்து கொள்ள முடியும். அன்பான சொற்களைப் பேசும் போது மட்டுமே இதழ்கள் விரிகின்றன. எனவே மலருக்கும் உதட்டிற்கும் இதழ் எனத் தமிழர்கள் பெயர் அமைத்துள்ளதனையும் உணர முடிகிறது.*

*கடினமான சொற்களைப் பேசும் பொழுது அல்லது சினம் கொள்ளும் பொழுது இதழ்வறண்டு விடுகிறது. சில வேளைகளில் இதழ்களைக் கடித்தும் வெறுப்பினைப் புலப்படுத்துவதுண்டு. அனிச்ச மலரின் இதழ்கள் முகந்தால் வாடி விடும் மென்மையுடன்*

*அமைந்துள்ளது. எனவே, விருந்துண்போர்மனம்அனிச்சமலரின் இதழோடு ஒப்பிட்டுள்ளதனைக் காண முடிகிறது. இந்நிலையினை உணர்ந்து எந்நிலையிலும் விருந்தின் பெருமை குறையாது காக்க வேண்டும் என உணர்த்தி விடுகிறார் தெய்வப் புலவர்.*

**மெல்லியளும் மெல்லிதழும்**

*விருந்தின் அருமையினை அனிச்சத்துடன் ஒப்பிட்ட தெய்வப் புலவர் தலைவியின் மென்மையினையும் அனிச்சம் பூவின் மென்மையோடு ஒப்பிடுகிறார். தலைவியின் மென்மையிடம் அனிச்சம்பூ தோற்றுவிடும் என்பதனை*

***நன்நீரை வாழி அனிச்சமே நின்னினும்***
***மென் நீரள்யாம் வீழ்பவள் (திருக்குறள்:1111)***

*எனக் குறிப்பிடுகிறார். பூக்களில் மென்மையான பூ தான் மட்டுமே என அனிச்சம் பூ எண்ணிக் கொண்டிருக்கிறது. அவ்வனிச்சம் பூவிடம் நின்னினும் மெல்லியல் தலைவி எனக் குறிப்பிட்டு அம்மலரின் எண்ணத்தை மாற்றும் நாடகத்தினை அரங்கேற்றுகிறார் தெய்வப் புலவர். காமத்துப் பாலில் கவிஞராகி தலைவியின் எழிலினைக் குறிப்பிடும் அழகினை உணர முடிகிறது.*

**மலரும் கனியும்**

*பெண்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆணுக்குத் தலைவியாகின்றனர். எனவே அவர்களுடைய மென்மையினைப் பொதுவாக உணர்த்த விழைகிறார் தெய்வப் புலவர்.*

***அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்***
***அடிக்கு நெருஞ்சிப் பழம் (திருக்குறள்: 1120)***

*என்னும் அடிகளில் மென்மையான அனிச்சம்பூவும் அன்னத்தின் இறகும் தலைவியின் கால்களுக்கு நெருஞ்சிப் பழத்தின் முள் போல துன்பம் செய்யும். அத்தகைய மென்மையான பாதங்களை உடையவள் தலைவி எனத் தெளிவுறுத்துகிறார். இந்நெருஞ்சிப் பழம் ஒன்றை மட்டுமே தெய்வப் புலவர் திருக்குறளில் கையாண்டுள்ளார் என்பதனை எண்ணிப் பார்ப்பதன் வழி இக்குறளின் அருமையினை நன்குணர முடிகிறது.*

**இடையழகின் மென்மை**

*பெண்ணின் அழகினை இடையால் உணர்த்துவது கவி உள்ளம். இடை சிறுத் திருப்பது பெண்ணின் எழிலினைக் கூட்டும் தன்மைத்து. அவ்வாறு தலைவியின் சிறுத்த இடையானது அனிச்சம்பூவின் காம்பின் எடையையும் தாங்காது எனக் குறிப்பிடுகிறார்.*

***அனிச்சம் பூ கால்களையால் பெய்தாள் நுசுப்பிற்கு***
***நல்ல படாஅ அறை (திருக்குறள்: 1115)***

*என்னும் குறளின் வழி தலைவியின் இடையின் மென்மையினை உணர்த்துகிறார். தலைவியானவள், தன் இடையின் மென்மை குறித்து அறியாமல் அனிச்சம் பூவினைக் காம்போடு தலையில் சூடிக் கொள்கிறாள். அதனால் இடை ஒடியும். அவள் இடையில் இனி நல்ல பறையொலி ஒலிக்காது எனத் தெய்வப் புலவர் கவிஞரகிக் கவிபாடும் நிலையினை இக்குறள் எடுத்துக் காட்டுகிறது.*

**குவளை மலரும் கண்களும்**

*பெண்கள், வீட்டின் கண்களாக மட்டுமின்றி சமுதாயத்தின் கண்களாகவும் விளங்குவதனைக் காண முடிகிறது. எண் சாண் உடம்பிற்கு தலையே முதலாகிறது. அவ்வாறே,*

*தலையில் கண்களே முதலாகிறது. எனவே கவிஞர்கள் பெண்ணின் அருமையினைக் கண்களோடு ஒப்பிட்டுக் கூறுவதனைக் காண முடிகிறது. அத்தகைய பெண்ணின் கண்களைப் பாடும் சிறப்பே கவிஞர்களின் புலமையினை புலப்படுத்தும்.*

***காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்***
***மாணிழை கண்ணொவ்வோம் என்று (திருக்குறள்:1114)***

*என்னும் திருக்குறள் தெய்வப் புலவரின் கவிப்புலமைக்குச் சான்றாகிறது. கண்கள் போன்ற வடிவமுடைய குவளைக்குப் பார்வை இல்லை. ஆனால் குவளை மலர் போன்ற தலைவியின் கண்களுக்குப் பார்வை உண்டு. தலைவியுடைய கண்களோ வடிவிலும் அழகு; பயனிலும் அழகு. எனவே, தலைவியின் கண்ணழகினைக் காணும் நிலையினைக்கு வளை மலர் பெற்றால் மாட்சிமை பொருந்திய அணிகலன்களை அணிந்த தலைவியின் கண்களுக்கு ஈடாக மாட்டோம் என நிலத்தை நோக்கி தலை கவிழும் எனப் பாடியுள்ளார் தெய்வப் புலவர். இக்குறளின் வழி, அணிகலன்களை அணிந்திருக்கும் தலைவியின் அழகு சிறப்புடையது. ஆனால், அவை அனைத்தும் தலைவியின் உயிர்ப்புடைய கண் என்னும் அணிகலனுக்கு ஈடாகாது என்பதனையும் உணர்த்தி விடுகிறார்.*

**அனிச்சமும் குவளையும்**

*முகந்தால் வாடிவிடுவது அனிச்சம். தலைவன் முகம் காணாமல் வாடி விடுவாள் தலைவி. அனிச்ச இதழ்களின் மென்மை தலைவியின் பாதத்தின் மென்மையை வருத்தும். அறியாமையால் காம்போடு அனிச்சத்தைச் சூடியதால் தலைவியின் இடை ஒடியும். இவ்வாறெல்லாம் கூறுவது தலைவியின் அருமையினை மட்டுமின்றி அனிச்சத்தின் அருமையினையும் உணர்த்தி விடுகிறது.*

*தலைவி தலையில் பூச்சூடிக் கொள்ளும் காம்பின் எடை தலைவியின் இடையை ஒடித்து விடும் என்னும் தெய்வப் புலவரின் கவி உள்ளமும், சீவகசிந்தாமணி பாடிய திருத்தக்கதேவரின் கவி உள்ளமும் ஒன்றாக இருப்பதனை*

***இவ்வாறு எங்கும் விளையாடி***
***இளையான் மார்பின் நலம்பருகிச்***
***செவ்வாய் விளர்த்துத் தோள்மெலிந்து***
***செய்யமுலையின் முகம் கருகி***
***அவ்வாய்வயிறு கால் வீங்கி***
***அனிச்ச மலரும் பொறைஆகி***
***ஒவ்வாப்பஞ்சி மெல்லணை மேல்***
***அசைந்தார் ஒண்பொன்கொடி அன்னார் (சீவகசிந்தாமணி: 2701)***

*என்னும் பாடல் உணர்த்தி நிற்கின்றது. மகப்பேறு காலத்தில் குழந்தையைத் தாங்கும் பெண்ணுக்கு அனிச்ச மலரும் பாரமாகும் எனக் கூறும் நுட்பத்தினை இங்கு ஒப்பு நோக்க முடிகிறது.*

*குவளை மலர் குளத்தில் பூப்பது. எனவே, நீர் இருக்கும் இடத்தில் தான் பூக்கும். அவ்வாறே தலைவியின் கண்களும் நீரவளம் உடையது. எனவே, தெய்வப் புலவர், தலைவியின் கண்களை, குவளையோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளதனை உணர முடிகிறது.*

*கண்ணில் வெண்மையும் கருப்பும், சிவப்பும் உண்டு. அவ்வாறே குவளையிலும் செம்மை, கருமை, வெண்மை உண்டு. இந்நோக்கில் காணும் பொழுது தெய்வப் புலவரின் தாவரவியல் நுட்பத்தைத் திருக்குறளில் கையாண்டுள்ளதனையும் உணர்ந்து கொள்ள முடிகிறது.*

**நிறைவாக**

*தமிழர்கள் வாழ்வு மலர்களோடு பின்னப் பட்டிருப்பதற்கு அக இலக்கியங்களும் புற இலக்கியங்களும் சான்றாகின்றன. தெய்வப் புலவர் திருவள்ளுவரும் மலர்களைச் சிறப்பாகக்கை யாண்டுள்ள திறத்தினை அறத்துப் பாலும் காமத்துப் பாலும் உணர்த்தி விடுகின்றன.*

*“நலம் புனைந்து உரைத்தல்” என்னும் நூற்றிப் பன்னிரண்டாவது அதிகாரத்தில் அனிச்ச மலரினையும் குவளை மலரினையும் கையாண்டுள்ளார் தெய்வப் புலவர். இருமலர்களை ; ஒரு பழத்தை மட்டுமே திருக்குறளில் கையாண்டுள்ளார். அவை இரண்டும் இவ்வதிகாரத்திலேயே இடம் பெற்றுச் சிறப்பதனைக் காண முடிகிறது.*

*மலர்களைக் கண்ணுக்கும் முகத்திற்கும் பெண்ணிற்கும் மட்டுமின்றி விருந்தோம்பல் அறத்திற்கும் எடுத்துக் காட்டாகக் காட்டியுள்ள தெய்வப் புலவரின் புலமையினை உணர்ந்து கொள்ள முடிகிறது.*

*தெய்வப் புலவர் திருவள்ளுவர், மென்மைக்கு அனிச்ச மலரையும் கண்களுக்கு குவளை மலரையும் எடுத்துக் காட்டியுள்ள தன் வழி, கவிஞர்கள் அப்பொருளிலேயே தொடர்ந்து அவ்விரண்டையுமே கையாண்டு வருவதனைக் காண முடிகிறது.*

*மலர்மிசை ஏகினான் (திருக்குறள்: 3) என்னும் திருக்குறளில் தாமரையினையும் மலர் காணின் மையாத்தி நெஞ்சே (திருக்குறள்: 1112) என்னும் திருக்குறள் பிற மலர்களையும், மலர் அன்ன கண்ணால் (திருக்குறள்: 1119, 1142) என்னும் குறளில் குவளை மலரினையும் “மலரினும் மெல்லிது காமம்” (திருக்குறள்: 1289) என்னும் திருக்குறளில் அனிச்ச மலரினையும் குறிப்பாக உணர்த்தியுள்ளார். எனினும் வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளது அனிச்சம், குவளை என்னும் இருமலர்களே எனத் தெளிய முடிகிறது.*

**துணை நூற்ப்பட்டியல்**


1. *உடையார் கேயில் குணை, திருக்குறள் ஒரு தேசிய நூல், தேசிய பதிப்பகம், எண்.772, சென்னை, சர்வதேச தமிழாய்வு நிறுவனம்.*
2. *திருநாவுக்கரசு, கே.டி., திருக்குறள் அஞ்சலி: ஒரு தொகுப்பு, முதல் திருக்குறள் கருத்தரங்க கட்டுரைகள், மெட்ராஸ் பல்கலைக்கழக பிரஸ், ப.124.*
3. *யோகி சுத்தானந்த பாரதி, ஆங்கில ஜோடிகளுடன் திருக்குறள், தமிழ் சந்தூர்ர் பேரவை, 15 மே 1995.*
4. *குப்புச்சாமி, ரா, திருக்குறள் தத்துவ யோகா, ஞான உரை, சேலம், லீலா பதிப்பகம், ப.1067.*

## References


1. *Udaiyar Koil Guna. (n.d.). Tirukkural: A National Book, Pub. No. 772, Chennai: International Institute of Tamil Studies.*
2. *Thirunavukkarasu, K. D. (1973). Tributes to Tirukkural: A compilation. In: First All India Tirukkural Seminar Papers. Madras: University of Madras Press. Pp 124.*
3. *Yogi Shuddhananda Bharati (Trans.). (15 May 1995). Thirukkural with English Couplets. Chennai: Tamil Chandror Peravai.*
4. *Kuppusamy, R. (n.d.). Tirukkural: Thatthuva, Yoga, Gnyana Urai [Hardbound]. Salem: Leela Padhippagam. P.1067 https://vallalars.blogspot.in/2017/05/thirukkural-thathuva-yoga-gnayna-urai.html*